+ திருச்சபை செய்திகள்

தொகுப்பு II - பிரதி – 154 – 22 - 11 - 2016
அப்போஸ்தலிக்க, கத்தோலிக்க, ஆசிரியத்திற்கு கீழ்ப்படிந்திருக்கும்
செய்தி, கட்டுரைகள் தேர்வு, வடிவமைப்பு, மின்னஞ்சல் வழியாக
வாசகர்களுக்கு சேர்ப்பது - கே. எம். செல்வராஜ், நிறுவன ஆசிரியர்
தொடர்புக்கு : avemariaave@gmail.com

---

*பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்.***1 யோவான் 3 : 18**

வாங்க வாசிக்கலாம் . . . திருச்சபை செய்திகள்
செய்திகள் ஆதாரம் வத்திக்கான் வானொலி இணையம் : http://ta.radiovaticana.va/
பிற நிறுவன செய்திகள் அடைப்புக்குறிக்குள்

திருச்சபை ஆலோசகர் மேதகு ஆயர் அ. அமல்ராஜ், உதகமண்டலம்
ஆசிரியர் குழு : மதுரை ஆனந்த், ஆரோக்கியம் டென்னிஸ், சார்லஸ் இருதயம், பிரான்சிஸ் நல்லப்பன் OMI, ஜெயபாலன் ரபேல் SDB, ஜாக்குலின் மேரி SSAM, ஜோமிக்ஸ், மரிய அருள் ராஜா, S.J., நித்ய சகாயம் OFM. Cap., இனிகோ ஜோக்கிம் SSAM
கட்டுரைகளில் வெளியாகும் கருத்துக்கள் அதன் படைப்பாளிகளுக்கு சொந்தமானது. வெளியடப்படும் கருத்துக்களுடன் உடன்பாடோ, எதிர்ப்போ + திருச்சபை செய்திகள் மற்றும் ஆசிரியர் குழுவிற்கு பொறுப்பு இல்லை.

திருத்தந்தை பிரான்சிஸ் : திருத்தூது மடல் – "இரக்கமும், அவலநிலையும்"
திருத்தந்தை பிரான்சிஸ் : திருத்தூது மடல் "இரக்கமும், அவலநிலையும்"
திருத்தந்தை பிரான்சிஸ் : இரக்கத்தின் உண்மை கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும்
திருத்தந்தை பிரான்சிஸ் : ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பிற்கு கடிதம்
வத்திக்கான் : மீனவர் உலக நாளில் கர்தினால் பரோலின் வழங்கிய உரை

வத்திக்கான் : திருத்தந்தைக்காக பங்களாதேஷ் காத்திருக்கிறது - **Catholic News Agency**
இந்தியா : இரயில் விபத்தில் உயிரிழந்தோர்க்கு ஆயர் பேரவை இரங்கல்
இந்தியா : ரூபாய் நோட்டு நடவடிக்கை: பிரதமர் கேட்டுள்ள 10 கேள்விகள் - பிஜபி
உடல் நலம் : புகைப்பதை நிறுத்தும் மனவுறுதியை எங்கிருந்து பெறுவது? மரு. கணேசன்
சிந்திக்க செயல்பட: இப்படி ஒரு வாழ்க்கை வாழ நீங்கள் தயாரா? #MinimalistLife - விகடன்

திருத்தந்தை பிரான்சிஸ் : திருத்தூது மடல் – "இரக்கமும், அவலநிலையும்"

Misericordia et miseraல் கையெழுத்திடுகிறார் திருத்தந்தை பிரான்சிஸ் - OSS_ROM

கத்தோலிக்கத் திருஅவையில், 2015ம் ஆண்டு டிசம்பர் 8ம் தேதி தொடங்கிய, இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டு, 2016ம் ஆண்டு நவம்பர் 20, இஞ்ஞாயிறன்று நிறைவடைந்தது. ஒரு குழந்தையை அணைத்து, பாதுகாக்கும் பெற்றோரைப்போல,

இறைவனின் இரக்கம், நம்மை அரவணைக்கிறது. அதற்கு நம்மையே அனுமதிக்க வேண்டும். இவ்வாறு, இந்த ஆண்டு முழுவதும், இறைவன் நம்மீது பொழியும் இரக்கம் பற்றியே, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் எல்லாச் செயல்களும், உரைகளும் இருந்தன. கிறிஸ்து அரசர் பெருவிழாவான இஞ்ஞாயிறு காலையில், வத்திக்கான் வளாகத்தில் பெருவிழாத் திருப்பலியை நிறைவேற்றுவதற்கு முன்னர், வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்காவின் புனிதக் கதவை மூடினார் திருத்தந்தை பிரான்சிஸ். அதன்பின்னர், வளாகத்தில் அமர்ந்திருந்த ஏறக்குறைய எழுபதாயிரம் விசுவாசிகளுக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கர்தினால்களுடன் கூட்டுத்திருப்பலியை நிறைவேற்றி, இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை நிறைவு செய்தார். அத்திருப்பலி மறையுரையில், புனிதக் கதவு மூடப்பட்டாலும், இரக்கத்தின் உண்மையான கதவாகிய, கிறிஸ்துவின் இதயம், நமக்காக, எப்போதும், அகலத் திறந்திருக்கின்றது. நாம் அனைவரும் இரக்கத்தின் கருவிகளாக மாறுவோம் என்று கேட்டுக்கொண்டார். இத்திருப்பலியின் இறுதியில், மூவேளை செபத்திற்குப் பின்னர், Misecordia et misera, அதாவது, "இரக்கமும், அவலநிலையும்" என்ற தலைப்பில், திருத்தூது மடல் ஒன்றில் கையெழுத்திட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை நிறைவு செய்யும் விதமாக, இந்த ஆண்டு பற்றிய சிந்தனைகளை உள்ளடக்கிய இம்மடலை வெளியிட்டார் திருத்தந்தை. திருஅவைக்குள் அனைத்து இறைமக்களையும் குறிக்கும் விதமாக, மனிலா கர்தினால் அந்தோனியோ தாக்லே, Saint Andrews மற்றும் Edinburgh பேராயர் Leo Cushley, இரக்கத்தின் மறைத்தூதர்களாகப் பணியாற்றிய, காங்கோ குடியரசு மற்றும் பிரேசிலைச் சேர்ந்த இரண்டு அருள்பணியாளர்கள், உரோம் மறைமாவட்ட ஒரு தியாக்கோன், அவரது குடும்பத்தினர், மெக்சிகோ மற்றும் தென் கொரியாவைச் சேர்ந்த இரு அருள்சகோதரிகள், அமெரிக்க ஐக்கிய நாட்டு ஒரு குடும்பம், திருமணமாகப்போகும் ஓர் இளைஞன், இளம்பெண், உரோம் மறைமாவட்ட பங்கில் மறைக்கல்வி ஆசிரியர்களாகப் பணியாற்றும் இரு அன்னையர், ஒரு மாற்றுத்திறனாளி, ஒரு நோயாளி ஆகியோருக்கு, இம்மடலின் பிரதிகளை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ். இத்திருத்தூது மடல், இத்திங்களன்று, செய்தியாளர் கூட்டத்தில் வெளியிடப்பட்டது. Misecordia et misera என்ற இத்திருத்தூது மடலை வாசிக்கும் எல்லாருக்கும், இரக்கமும், அமைதியும் கிடைப்பதாக என்ற ஆசீரோடு இம்மடலைத் தொடங்கியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

Misecordia et misera என்பது, விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை, இயேசு, சந்தித்த நிகழ்வு பற்றி, புனித அகுஸ்தீன் விளக்கும்போது பயன்படுத்திய சொற்றொடராகும். இறைவனின் அன்பு, ஒரு பாவியின் உள்ளத்தைத் தொடும் பேருண்மையை விளக்குவதற்கு, இதைவிட மிக அழகான அல்லது சரியான சொற்றொடரைக் கற்பனை செய்து பார்ப்பது கடினம். இயேசுவும், விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணும் மட்டும் தனியாக இருந்தனர். அதாவது, இரக்கமும், துன்பமும் மட்டும் தனியாக இருந்தன. இந்த நிகழ்வில், இறைவனின் மாபெரும் இரக்கமும், நீதியும் வெளிப்படுகின்றன. இந்தப் போதனை, இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் நிறைவில், ஒளியை வீசுவது மட்டுமல்ல, நாம் வருங்காலத்தில் பின்பற்றவேண்டிய பாதையையும் சுட்டிக்காட்டுகின்றது. விபசாரத்தில் பிடிபட்ட பெண், நம்பிக்கையோடு தனது எதிர்காலத்தை நோக்கவும், புதிய வாழ்வைத் தொடங்கவும் இயேசு உதவுகிறார். இப்பெண், விரும்பினால், அன்பில் வாழவும்(எபே.5:2) இயலும். இப்பெண்ணிற்கு, பாவம் செய்வதற்கான விருப்பம் ஏற்பட்டாலும்கூட, இவர் ஒருமுறை இரக்கத்தை அணிந்துகொண்ட பின்னர், அந்த விருப்பம், இறையன்பால் வேறுதிசையில் மாற்றப்பட்டு, இவர் தனது வாழ்வைப் புதுவிதமாக நோக்கவும், வாழவும் வைக்கின்றது. இதையே, இயேசு, மற்றொரு நிகழ்விலும், நமக்குத் தெளிவாகக் கற்றுத் தருகிறார். இயேசு, பரிசேயர் ஒருவர் வீட்டில் விருந்துண்ணச் சென்ற சமயம், எல்லாராலும் பாவியாக அறியப்பட்ட ஒரு பெண், இயேசுவின் காலடிகளில் நறுமணத் தைலம் பூசி, தனது கண்ணீரால் நனைத்தார்(cf.லூக்.7:36-50). இச்செயலால் துர்மாதிரிகை அடைந்த பரிசேயரிடம் இயேசு, அப்பெண் செய்த பாவங்கள் மன்னிக்கப்பட்டன, ஏனெனில், இவர் மிகுதியாக அன்புகூர்ந்தார். குறைவாக மன்னிப்புப் பெறுவோர் குறைவாக அன்பு செலுத்துவோர் ஆவர் (cf.லூக்.7:47) என்று சொன்னார்.

ஆம். மன்னிப்பு, இறைத்தந்தையின் அன்பை, மிகத் தெளிவாகக் காணக்கூடிய அடையாளம். இதனாலேயே, மன்னிப்பை நம்மில் யாருமே, வரை யறைக்குட்பட்டதாக வைத்தல் கூடாது. இரக்கம், எப்போதுமே, நம் வானகத் தந்தையின் இலவசச் செயலாக உள்ளது. நாம் சிறப்பித்திருக்கின்ற யூபிலி ஆண்டில், இரக்கத்தின் அருளை மிகுதியாகப் பெற்றிருக்கின்றோம். இவ்வேளையில், நாம், நம் வருங்காலத்தை நோக்க வேண்டிய நேரம் வந்துள்ளது. நாம் அனுபவித்துள்ள இறைவனின் இரக்கத்தின் வளமையை, மகிழ்வோடும், நம்பிக்கையோடும், ஆர்வத்தோடும் எவ்வாறு மிகச் சிறப்பாகத் தொடர்ந்து செயல்படுத்துவது என்பதைப் புரிந்துகொள்வதற்கான நேரம் வந்துள்ளது. முதலில், நாம் இரக்கத்தைக் கொண்டாடுவதற்கு அழைக்கப்படுகிறோம். திருவழிபாட்டில், இரக்கம், மீண்டும் மீண்டும் வேண்டப்படுவது மட்டுமல்லாமல், அது, உண்மையிலேயே பெறப்பட்டு, அனுபவிக்கப்படுகின்றது. திருப்பலியில், தொடக்கமுதல், இறுதிவரை, இரக்கம் தொடர்ந்து வெளிப்படுகின்றது. திருப்பலிக் கொண்டாட்டத்தின் ஒவ்வொரு தருணத்திலும், இறைவனின் இரக்கம் குறிப்பிடப்படுகின்றது. அருளடையாள வாழ்விலும், இரக்கம் ஏராளமாகப் பொழியப்படுகின்றது. இறைவன் தம்மை வெளிப்படுத்தும் முதல் செயல் அன்பே. எனவே, இறைவன் நம்மீது வைத்துள்ள அன்பில் நம்பிக்கை வைத்து, அவருக்கு நம் இதயங்களைத் திறப்போம். நாம் பாவிகளாக இருந்தாலும், அவரின் அன்பு, எப்போதும் நமக்கு முன்செல்கிறது, நம்மோடு உடன்நடந்து, நம்மில் இருக்கின்றது. எனவே, இச்சூழலில், இறைவார்த்தையைக் கேட்பது மிக முக்கியத்துவம் பெறுகிறது. ஒவ்வொரு ஞாயிறும், கிறிஸ்தவ சமூகத்திற்கு இறைவார்த்தை அறிவிக்கப்படுகின்றது. எனவே, மறையுரைத் தயாரிப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ஓர் அருள்பணியாளரின் மறை யுரை, அவரே, ஆண்டவரின் இரக்கமுள்ள

நன்மைத்தனத்தை அனுபவித்ததன் வெளிப்பாடாக, மிகவும் பலனுள்ளதாக அமைய வேண்டும் என்று, திருத்தந்தை இம்மடலில் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவிவிலியம், இறைஇரக்கத்தின் விந்தைகளின், மிகப்பெரிய கதையாகும். அதன் ஒவ்வொரு பக்கமும், இறைத்தந்தையின் அன்பில் ஆழமாக வேரூன்றியுள்ளது. ஊற்றெடுக்கும் இறையன்பின் இரக்கப்பெருக்கம், இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்ளப்படுவதற்கு உதவியாக, இறைவார்த்தை அதிகமதிகமாக அறியப்பட்டு, கொண்டாடப்பட வேண்டும், அது எல்லாரிலும் விதைக்கப்பட வேண்டும் என்று நான் மிகவும் ஆவல் கொள்கிறேன். "மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது, கற்பிப்பதற்கும், கண்டிப்பதற்கும், சீராக்குவதற்கும், நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது(2திமொ.3:16)". எனவே, திருவிவிலியம் நன்றாக அறியப்படவும், மிகவும் பரவலாகப் பரப்பப்படவும், திருவழிபாட்டு ஆண்டின் ஒரு ஞாயிற்றுக்கிழமையில், ஒவ்வொரு கிறிஸ்தவ சமூகமும், தன் முயற்சிகளைப் புதுப்பித்தால், எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்! அந்த ஞாயிறு, இறைவார்த்தைக்கு முழுவதும் அர்ப்பணிக்கும் நாளாக இருக்க வேண்டும். ஏனென்றால், ஆண்டவருக்கும், அவரின் மக்களுக்கும் இடையே இடம்பெறும், தொடர் உரையாடலில் உள்ள வற்றாத வளங்களைப் போற்றுவதற்கு உதவியாக இருப்பது இறைவார்த்தை. திருவிவிலியம் நன்றாக அறியப்படுவதற்கு, படைப்பாற்றல் திறனோடு முயற்சிகள் எடுக்கப்பட்டால், விசுவாசிகள், இறைவார்த்தையைப் பகிர்ந்துகொள்வதற்கு, உயிருள்ள கருவிகளாக மாற உதவும். இந்த முயற்சிகளில், இறைவார்த்தையை வாசித்து, தியானித்து, விளக்கம் சொல்லிச் செபிக்கும் லெக்சியோ திவினாவும் உள்ளடங்கும்.

இறை இரக்கத்தைக் கொண்டாடுவது, தவமுயற்சி மற்றும் ஒப்புரவு அருளடையாளத்தில், மிகச சிறப்பான விதத்தில் இடம்பெறுகின்றது. ஒப்புரவு அருளடையாளத்தில் நாம் பெறும் இறைவனின் மன்னிப்பு, அவரிடம் நாம் திரும்பி வரவும், அவர் நமக்கு நெருக்கமாக இருப்பதை அனுபவிக்கவும் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இறைவன் மட்டுமே பாவங்களை மன்னிக்கிறார். ஆயினும், அவர் நம்மை மன்னித்ததுபோல, நாமும், பிறரை மன்னிக்கத் தயாராக இருக்குமாறு அவர் நம்மிடம் கேட்கிறார். நம் இதயங்கள் மூடப்பட்டு, மன்னிக்க இயலாமல் இருப்பது எவ்வளவு கவலையளிக்கின்றது! நம் வாழ்வில், மனக்கசப்பு, பழிவாங்குதல், கோபம் ஆகியவை மேலோங்கி, அவை, நம் வாழ்வைத் துன்பகரமாக மாற்றுகின்றன. மேலும், இரக்கத்திற்கு மகிழ்வோடு நம்மை அர்ப்பணிக்கத் தடையாகவும் உள்ளன. இவ்வாறு தனது மடலில் கூறியுள்ள திருத்தந்தை, இந்த யூபிலி ஆண்டில், இரக்கத்தின் மறைப்பணியாளர்களாகப் பணியாற்றிய அருள்பணியாளர்க்குத் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். மேலும், உண்மையான குருத்துவ மறைப்பணியாகிய ஒப்புரவு அருளடையாளத்தை நிறைவேற்றுவதற்கு, அருள்பணியாளர்கள், தங்களைக் கவனமுடன் தயாரிக்குமாறு கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்துள்ள திருத்தந்தை, இவர்களின் இப்பணிக்குத் தனது இதயப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துள்ளார். ஒப்புரவு அருளடையாளத்திற்கு வருபவரின் பாவம், எவ்வளவு பெரியதாக இருந்தாலும், அனைவரையும், தந்தைக்குரிய அன்புடன் வரவேற்று, அவர்கள் செய்த தீமைகள் குறித்து சிந்திக்கவும், அவர்கள் திருந்திய வாழ்வில் நடக்கவும், இறைவனின் மன்னிப்பை வழங்குவதில் தாராளமாக இருக்கவும் கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்தவ வாழ்வில் ஒப்புரவு அருளடையாளம், மைய இடத்தைக் கொண்டிருக்கச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தந்தையின் விடுதலையளிக்கும் மன்னிப்பை அனுபவிக்கச் செய்ய வேண்டும். தவக்காலத்தின் நான்காம் ஞாயிறையொட்டி 24 மணிநேர திருநற்கருணை ஆதாரதனை இதற்கு நல்லதொரு தருணமாகும். கருக்கலைப்பு மாபெரும் பாவம். ஏனெனில், இது மாசற்ற வாழ்வுக்கு முடிவு கட்டுகிறது. அதேநேரம், இறைவனின் இரக்கத்தில் மன்னிப்புப் பெறாத எந்தப் பாவமும் இல்லை. எனவே, இக்குற்றத்தில் மனம் வருந்தி வரும் விசுவாசிகளுக்கு, அருள்பணியாளர்கள், நல்ல வழிகாட்டியாக இருந்து, ஆதரவளித்து வழிநடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை, இரக்கத்தின் வேறொரு முகம் ஆறுதல் என்று சொல்லி, துன்பம், புரிந்துகொள்ளாமை மற்றும் வேதனைப்படும் எல்லாருக்கும் ஆறுதலாக இருக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். திருமணம் என்ற அருளடையாளத்தின் முக்கியத்துவம் பற்றியும் கூறியுள்ளார் திருத்தந்தை. இந்த அருளடையாளத்தின் அருள், குடும்பத்தை உறுதிப்படுத்துவது மட்டுமன்றி, இரக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, ஒரு நல்ல இடமாகவும் ஆக்குகின்றது. அதோடு, கிறிஸ்தவ சமூகமும், மேய்ப்புப்பணி நடவடிக்கைகளும், குடும்பத்தின் மாபெரும் நேர்மறை விழுமியங்களுக்கு அர்ப்பணித்துச் செயல்படவும் உதவுகின்றது. மேலும், மரணத்தின் இறுதி நேரம் பற்றிய முக்கியத்துவத்தையும் இம்மடலில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை. எல்லா மதங்களிலும், பிறப்பைப் போன்று, இறப்பும், சமய முக்கியத்துவம் பெற்றுள்ளது. கிறிஸ்தவர்களாகிய நாம், அடக்கச்சடங்கு திருவழிபாட்டை, இறந்த ஆன்மாவுக்காகவும், தங்களின் அன்புக்குரியவர்களின் இழப்பினால் துன்புறுவோருக்காகவும், நம்பிக்கையுடன் செபிப்பதாக அமைக்க வேண்டும்.

யூபிலி ஆண்டு முடிவுக்கு வந்துள்ளது. புனிதக் கதவு மூடப்பட்டுள்ளது. ஆனால், நம் இதயத்தின் இரக்கத் கதவுகள் தொடர்ந்து அகலத் திறந்திருக்கின்றன. இந்த யூபிலி ஆண்டில், குறிப்பாக, வெள்ளிக்கிழமை இரக்கச் செயல்களில், நம் உலகில் பிரசன்னமாக இருக்கும் நன்மைத்தனத்தை அனுபவித்தேன். இந்நேரத்தில், தினமும், தங்களின் நேரத்தையும் முயற்சிகளையும் செலவழிக்கும் தன்னார்வலர்களை, நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன் என்று, இம்மடலில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அருளின் கனியாகிய புதிய முயற்சிகளைக் கொணரும், இரக்கத்தின் படைப்பாற்றலைக் கட்டவிழ்த்துவிடும் நேரம் இது. இக்காலத்தில், உணவு, வேலை, குடியிருப்பு மற்றும் அமைதி தேடி, எண்ணிக்கையற்ற மக்கள், ஒரு நாடுவிட்டு, வேறு நாடுகளுக்குத் தொடர்ந்து புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். நோய், பல்வேறு வடிவங்களில் துன்பங்களை ஏற்படுத்தி, உதவிக்காகக் குரல் கொடுக்கின்றது. சிறைகள், மனிதமற்ற சூழல்களால் நிறைந்துள்ளன. எழுத்தறிவின்மை பரவலாக உள்ளது. இது, சிறாரை, புதுவிதமான அடிமைமுறைக்கு உட்படுத்துகின்றது. தீவிர தனிமனிதக் கோட்பாடு, குறிப்பாக, மேற்கில் நிலவும் இந்நிலை, தோழமையுணர்வை இழக்கச் செய்கிறது. இக்காலத்தில், பலர், கடவுள் அனுபவமே இல்லாமல் இருக்கின்றனர். இது மாபெரும் ஏழ்மையாகவும், மனித வாழ்வின் தவிர்க்க இயலாத மாண்பை ஏற்பதற்குப் பெரும் தடையாகவும் உள்ளது. நாம், இந்த யூபிலி ஆண்டில், பல இரக்கச் செயல்களைச் செய்தோம். ஆனால், நம் உலகம், மனித மாண்பைத் தாக்கும் புதுவித ஆன்மீக மற்றும் பொருளிய ஏழ்மையைத் தொடர்ந்து உருவாக்கிக்கொண்டே இருக்கின்றது. இக்காரணத்தினால், திருஅவை, எப்போதும் விழிப்பாயிருந்து, இரக்கத்தின் புதிய பணிகளோடு தன்னை இணைத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். அவற்றை, மனத்தாராளத்தோடும், ஆர்வத்தோடும் ஆற்ற வேண்டும். கொல்கத்தாவில் இயேசுவை நினைத்துப் பார்ப்போம். மாண்புடைய வாழ்வு வாழ்வதிலிருந்து மக்களைத் தடைசெய்யும் ஏழ்மை மற்றும் ஒரங்கட்டப்படுவதன் புதிய வடிவங்களுக்கு நம் முகத்தைத் திருப்பாதிருப்போம். வேலையின்றி அல்லது, போதுமான ஊதியமின்றியும், வாழ்வதற்கு வீடோ, நிலமோ இல்லாமலும் இருப்பவர்களையும், மதம், இனம், அல்லது சமூகநிலையால் பாகுபாட்டை எதிர்கொள்பவர்களையும் நினைத்துப் பார்ப்போம். கிறிஸ்தவ இரக்கம், தோழமையோடு செயல்பட வைக்கின்றது. மேலும், இரக்கத்தின் சமூகப் பண்பு, புறக்கணிப்பையும், வெளிவேடத்தையும் அழித்தொழிக்க அழைக்கின்றது. பிறரைச் சந்திப்பதை மீண்டும் கண்டுணருவதை அடிப்படையாகக் கொண்ட, இரக்கத்தின் கலாச்சாரத்தை ஊக்குவிக்கவும் திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். இதனால், எவரும், மற்றவரைப் புறக்கணிக்காமலும், நம் சகோதர, சகோதரிகளின் துன்பங்களிலிருந்து விலகிச் செல்லாமலும் இருப்பார்கள். இடைவிடா செபம், தூய ஆவியாரின் செயல்களுக்குப் பணிந்திருத்தல், புனிதர்கள் வாழ்வு பற்றிய அறிவு, ஏழைகளுக்கு நெருக்கமாக இருத்தல் ஆகியவைகளில், இரக்கத்தின் கலாச்சாரம், வடிவமைக்கப்படுகின்றது. யூபிலி ஆண்டில் ஆற்றப்பட்ட உடல் மற்றும் ஆன்மீகம் சார்ந்த இரக்கச் செயல்கள் தொடர்ந்து நடத்தப்படுமாறு பரிந்துரைத்துள்ளார் திருத்தந்தை.

மேலும், இந்த சிறப்பு யூபிலி ஆண்டின் தெளிவான ஓர் அடையாளமாக, திருவழிபாட்டு ஆண்டின் 33வது ஞாயிறை, உலக ஏழைகள் தினமாகச் சிறப்பிக்குமாறும் உலகளாவியத் திருஅவைக்கு அழைப்பு விடுக்கிறேன். இதுவே, கிறிஸ்து அரசர் பெருவிழாவுக்குத், தகுதியான முறையில் தயாரிக்க சிறந்த வழியாகும் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.. நம் வாழ்வுப் பயணத்தின், ஒவ்வொரு நாளும் கடவுளின் பிரசன்னத்தால் குறிக்கப்பட்டுள்ளது. நம் முயற்சிகளைத் தூய ஆவியார் வழிநடத்துகிறார். நம் அன்னை மரியா, தம் இரக்கத்தின் கண்களால் நம்மை எப்போதும் நோக்குகிறார். அவரின் தாய்க்குரிய பராமரிப்பில் நம்மை அர்ப்பணிப்போம் என்று இம்மடலை நிறைவு செய்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தையின் விருப்பப்படி, நம் இரக்கச் செயல்களைத் தொடர்ந்து ஆற்றுவோம். இறைஇரக்கத்தின் தூதர்களாக மாறுவோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் : திருத்தூது மடல் "இரக்கமும், அவலநிலையும்"

திருத்தூது மடலைக் கொடுக்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் - OSS_ROM

இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை நிறைவு செய்யும் விதமாக, இந்த ஆண்டு பற்றிய சிந்தனைகளை உள்ளடக்கிய Misecordia et misera, அதாவது, “இரக்கமும், அவலநிலையும்”என்ற தலைப்பில், திருத்தூது மடல் ஒன்றை வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். Misecordia et misera என்பது, விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை, இயேசு சந்தித்த நிகழ்வு பற்றி புனித அகுஸ்தீன் விளக்கும்போது பயன்படுத்திய சொற்றொடராகும். விபசாரத்தில் பிடிபட்ட பெண், நம்பிக்கையோடு தனது எதிர்காலத்தை நோக்கவும், புதிய வாழ்வைத் தொடங்கவும் இயேசு உதவுகிறார் என தன் மடலில் கூறியுள்ள திருத்தந்தை, இயேசு, பரிசேயர் ஒருவர் வீட்டில் விருந்துண்ணச் சென்றபோது, எல்லாராலும் பாவியாக அறியப்பட்ட பெண், இயேசுவின் காலடிகளில் நறுமணத் தைலம் பூசி, தனது கண்ணீரால் நனைத்ததையும், அப்பெண் செய்த பாவங்கள் மன்னிக்கப்பட்டதையும் தன் திருத்தூது மடலில் சுட்டிக்காட்டியுள்ளார்.மன்னிப்பு, இறைத்தந்தையின் அன்பை, மிகத் தெளிவாகக் காணக்கூடிய அடையாளம். இதனாலேயே, மன்னிப்பை நம்மில் யாருமே, வரையறைக்குட்பட்டதாக வைத்தல் கூடாது எனவும் தன் மடலில் கேட்டுள்ளார், திருத்தந்தை.நாம் அனுபவித்துள்ள இறைவனின் இரக்கத்தின் வளமையை, மகிழ்வோடும், நம்பிக்கையோடும், ஆர்வத்தோடும் எவ்வாறு மிகச் சிறப்பாகத் தொடர்ந்து செயல்படுத்துவது என்பதைப் புரிந்துகொள்வதற்கான நேரம் வந்துள்ளது எனவும், தன் மடலில் கூறியுள்ளார், திருத்தந்தை.இறைவன் நம்மீது வைத்துள்ள அன்பில் நம்பிக்கை வைத்து அவருக்கு நம் இதயங்களைத் திறப்போம் என விண்ணப்பித்துள்ள திருத்தந்தை, ஒப்புரவு அருளடையாளத்தில் நாம் பெறும் இறைவனின் மன்னிப்பு, அவரிடம் நாம் திரும்பி வரவும், அவர் நமக்கு நெருக்கமாக இருப்பதை அனுபவிக்கவும் நமக்கு அழைப்பு விடுக்கின்றது என்பதையும் எடுத்தியம்பியுள்ளார்.

இரக்கத்தின் வேறொரு முகம் ஆறுதல் என்று கூறியுள்ள திருத்தந்தை, துன்பம், புரிந்துகொள்ளாமை மற்றும் வேதனைப்படும் அனைவருக்கும் ஆறுதலாக இருக்குமாறு எல்லாருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். திருத்தந்தையின் இம்மடல் [illegible] திருஅவைக்குள் அனைத்து இறைமக்களையும் குறிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் திருத்தந்தை வழங்கினார். மனிலாப் பேராயர், கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே, Saint Andrews மற்றும் Edinburgh பேராயர் Leo Cushley, இரக்கத்தின் மறைப்பணியார்களாகப் பணியாற்றிய, காங்கோ குடியரசு மற்றும் பிரேசிலைச் சேர்ந்த இரு அருள்பணியாளர்கள், உரோம் மறைமாவட்டத்தில் பணியாற்றும் ஒரு தியாக்கோன், மற்றும், அவரது குடும்பத்தினர், மெக்சிகோ மற்றும் தென்கொரியாவைச் சேர்ந்த இரு அருள்சகோதரிகள், அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த ஒரு குடும்பம், திருமணமாகப்போகும் ஓர் இளைஞர், இளம்பெண், உரோம் மறைமாவட்ட பங்கில் மறைக்கல்வி ஆசிரியர்களாகப் பணியாற்றும் இரு அன்னையர், ஒரு மாற்றுத் திறனாளி, ஒரு நோயாளி ஆகியோர் திருத்தந்தையிடமிருந்து முதல் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் : இரக்கத்தின் உண்மை கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும்

புனிதக் கதவை மூடிய திருத்தந்தை பிரான்சிஸ் - ANSA

சிறப்பு யூபிலி ஆண்டின் புனிதக் கதவுகள் மூடப்பட்டாலும், இயேசுவின் இதயம் எனும் இரக்கத்தின் உண்மை கதவுகள் நமக்காக எப்போதும் திறந்தே இருக்கும் என இஞ்ஞாயிறு யூபிலி ஆண்டு நிறைவுத் திருப்பலியில் மறையுரை வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.நாம் இரக்கமுள்ளவர்களகச் செயல்படவும், இரக்கத்தின் கருவிகளாக மாறவும் உதவும் வண்ணம் நாம் இறைவனிடம் இருந்து பெற்ற இரக்க நிகழ்வுகள் குறித்து சிந்திப்போம் என்றார் திருத்தந்தை.

இஞ்ஞாயிறன்று சிறப்பிக்கப்பட்ட 'கிறிஸ்து அரசர்' விழா குறித்து தன் மறையுரையில் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வுலகம் அரசத்தன்மையை அதிகாரத்தோடு தொடர்புப்படுத்தி நோக்கினாலும், இயேசுவின் அரசத்தன்மை என்பது, அனைத்தையும் எதிர்கொண்டு குணப் படுத்தும் அன்பை உள்ளடக்கியதாகும் என்றார். இந்த அன்பினாலேயே அவர்

தன்னை தாழ்மைப்படுத்தி, நம் துன்பங்களைச் சுமந்து அநீதிகளையும் கைவிடப்படல்களையும் மரணத்தையும் சந்தித்தார் என்றார், திருத்தந்தை பிரான்சிஸ். இறைமகன் இயேசு நம்மைத் தீர்ப்பிடவில்லை, நம்மை வெற்றிகொள்ளவில்லை, அதேவேளை, நம் சுதந்திரத்தைப் புறந்தள்ளவுமில்லை, மாறாக, தாழ்ச்சியுடன் கூடிய அன்பினால், நமக்குப் பாதை அமைத்து, அனைத்தையும் மன்னித்தார் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த அன்பே, அன்றும் இன்றும் என்றும் தொடர்ந்து, நம் எதிரிகளான பாவத்தையும், மரணத்தையும், அச்சத்தையும், வெற்றிகண்டு வருகிறது என்றார்.

இயேசு இவ்வுலகில் நடமாடிய காலத்தில், அவரிடம் உதவி நாடி, அவரை நெருக்கிய மக்கள், அவர் சிலுவையில் தொங்கியபோது அவரிடமிருந்து தூர விலகி நின்று, வெறும் பார்வையாளர்களாகவே மாறியதைப் பற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை, நாமும் அதைப்போன்று பாராமுகமாக வாழ இயலாது என்றார். இயேசுவின் சிலுவையினடியில் நின்ற இரண்டாவது வகை மனிதர்களான, மக்கள், தலைவர்கள், படை வீரர்கள் மற்றும் ஒரு குற்றவாளி, இயேசுவைக் கிண்டல் செய்தபோது, அவர் எவ்வாறு மௌனம் காத்து, அவர்களை அன்புகூர்ந்து, மன்னித்தாரோ, அதுபோல் நாமும் செயல்படவேண்டும் என்ற அழைப்பை முன்வைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மூன்றாவது வகை மனிதராக நாம் அந்த நல்லக் கள்வனை நோக்குவோம், ஏனெனில் இயேசுவின் அரசாட்சியில் நம்பிக்கைக் கொண்ட அவரே இயேசுவை நோக்கி, அவர் அரியணையில் வரும்போது தன்னையும் நினைவுகூரும்படிக் கேட்கிறார். இயேசுவும் அவர் பாவங்கள் அனைத்தையும் மன்னித்து, அவருக்கு உறுதி வழங்குகிறார், ஏனெனில் இயேசு நம் பாவங்களை நினைவில் வைப்பதில்லை, மாறாக, அனைத்தையும் புதிதாகத் துவக்க முடியும் என்பதில் நம்பிக்கைக் கொண்டவர் அவர், என்றார், திருத்தந்தை. நாமும் ஒப்புரவு மற்றும் மன்னிப்பிற்கான கதவுகளை ஒரு நாளும் மூடாமல், மற்றவர்க்கு நம்பிக்கையின் பாதையாகச் செயல்படுவோம் என்ற அழைப்பையும் முன்வைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தை பிரான்சிஸ் : ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பிற்கு கடிதம்

திருத்தந்தையிடமிருந்து திருத்தூது மடலைப் பெறும் கர்தினால் தாக்லே - ANSA

இம்மாதம் 28 முதல் டிசம்பர் 4ம் தேதி வரை இலங்கைத் தலைநகரில் இடம்பெறவிருக்கும் Federation of Asian Bishops Conference - FABC எனும் ஆசிய ஆயர் பேரவையின் 11வது ஆண்டு நிறையமர்வுக் கூட்டத்திற்கு கர்தினால் டெலெஸ்போர் டோப்போ வழியாக செய்தி ஒன்றை அனுப்பி யுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். இக்கூட்டத்தில் கலந்துகொள்ள, இந்தியாவின் இராஞ்சி பேராயர், கர்தினால் டோப்போ அவர்களை, தன் பிரதி நிதியாக நியமித்துள்ள திருத்தந்தை, கர்தினாலுக்கு அனுப்பியுள்ள செய்தியில், தற்போது இலங்கையில் இடம்பெற உள்ள இந்த 11வது நிறையமர்வுக் கூட்டம், பண்டைய காலத்தில் துடிப்புள்ள மறைபோதகர்கள் ஆசிய கடற்கரைகளில் வந்திறங்கியதை மீண்டும் ஒருமுறை நினைவு படுத்துவதாக உள்ளது என்று கூறியுள்ளார்.ஆசிய ஆயர் பேரவைக் கூட்டமைப்பின் தலைவர், கர்தினால் ஆஸ்வால்டு கிரேசியஸ் அவர்களின் வழி நடத்தலில், இந்த ஆயர் பேரவையின் 11வது நிறையமர்வுக் கூட்டம், உயிர்துடிப்புடைய மத உணர்வுகளைத் தூண்டுவதாகவும், விசுவாசத்தை உறுதிப்படுத்து வதாகவும் அமையும் என்ற நம்பிக்கையையும், கர்தினால் டோப்போ அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வெளியிட்டுள்ளார், திருத்தந்தை. ஆயர்களின் அடுத்தவாரக் கூட்டத்திற்கு தன் ஆசீரையும் செபங்களையும் வழங்குவதாகவும் அதில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

வத்திக்கான் : மீனவர் உலக நாளில் கர்தினால் பரோலின் வழங்கிய உரை

திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின் - AP

மீன்பிடித் தொழில், உலக உணவு பாதுகாப்பு, மனித நலம், பொருளாதார வளர்ச்சி போன்றவற்றிற்கு இன்றியமையாததாக இருக்கும் அதே வேளை, சிறிய அளவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் முக்கியத்துவம் நிறைந்தது என்று, திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் கூறினார். நவம்பர் 21, இத்திங்களன்று சிறப்பிக்கப்பட்ட மீனவர் உலக நாளையொட்டி, உணவு மற்றும் வேளாண்மை நிறுவன மான FAOவின் தலைமையகத்தில், நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில், துவக்க உரை வழங்கிய கர்தினால் அவர்கள், மீன்பிடித் தொழிலில் பல இலட்சம் மக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள அதே வேளையில், பல குடும்பங்களும், குழுக்களும், சமூகங்களும் இதை நம்பியே வாழ்கின்றன என்று கூறினார். மீன்பிடித் தொழில் துறையின் பொருளாதாரக் கண்ணோட்டம், வருங்காலத்தின் வளமான வாழ்வை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் பாது

காப்பையும் மனதில் கொண்டதாக அமையவேண்டும் என்று கர்தினால் பரோலின் அவர்கள் தன் உரையில் குறிப்பிட்டார். இத்தொழிலில் பல்லாயிரம் பேர் கட்டாய வேலைக்குத் தள்ளப்பட்டுள்ளது, அடிமைத்தொழில் என்பது மறைமுகமாக உயிருடன் உள்ளது என்பதைக் காட்டுகிறது என்ற கவலையையும் வெளியிட்டார், கர்தினால் பரோலின்.மீன்பிடித் தொழிலில் பெரிய நிறுவனங்களால் பணிக்கு அமர்த்தப்படுவோர், வேலை நிரந்தரமற்ற நிலையால் அச்சத்துடன் வாழ்வது, அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவது, நடுக்கடலில் கொள்ளையர்களால் தாக்கப்படுவது, கடத்தப்படுவது, கடல் வழி வரும் புலம்பெயர்ந்தோர் பிரச்சனை போன்றவை குறித்தும் தன் கருத்துக்களை FAO தலைமையகத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் பேசினார், திருப்பீடச் செயலர், கர்தினால் பரோலின்.

வத்திக்கான் : திருத்தந்தைக்காக பங்களாதேஷ் காத்திருக்கிறது

பங்களாதேஷ் புதிய கர்தினால், பேட்ரிக் டி ரொசாரியோ - REUTERS

2017ம் ஆண்டில், திருத்தந்தையின் திருத்தூதுப் பயணத்திற்காக பங்களாதேஷ் நாடு காத்திருப்பதாகவும், அவரின் திருத்தூதுப் பயணத்தால், மதங்க ளிடையே உறவு பலப்படும் எனவும் கூறினார், அந்நாட்டின் புதிய கர்தினால், பேட்ரிக் டி ரொசாரியோ. திருத்தந்தையின் வரவால் பங்களாதேஷ் தலத்திருஅவை புது இரத்தத்தைப் பெறுவதுடன், மதங்களிடையே இணக்க வாழ்வுக்கும், அரசு ஊழியர்களின் உரிமைகளுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் அது உதவுவதாக இருக்கும் என்றார், இச்சனிக்கிழமையன்று கர்தினாலாக உயர்த்தப்பட்ட டாக்கா பேராயர் பேட்ரிக் டி ரொசாரியோ. அண்மைக்காலங்களில் வன்முறை நடவடிக்கைகளால் துன்புறும் பங்களாதேஷ் நாட்டிற்கு, திருத்தந்தையின் திருத்தூதுப் பயணம், சமூக இணக்க வாழ்வுக்கு உதவும் ஒன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார், புதிய கர்தினால்.

இந்தியா : இரயில் விபத்தில் உயிரிழந்தோர்க்கு ஆயர் பேரவை இரங்கல்

இந்தியாவின் கான்பூர் நகருக்கருகே இடம்பெற்ற இரயில் விபத்து - REUTERS

இஞ்ஞாயிறு அதிகாலையில் இந்தியாவின் கான்பூருக்கருகே இடம்பெற்ற இரயில் விபத்தில் உயிரிழந்தவர்கள் குறித்து தன் ஆழ்ந்த அனுதாபங்களை வெளியிட்டுள்ளது, இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை.உத்தரப்பிரதேசத்தின் கான்பூரில், இன்டோர் - பாட்னா இரயில் தடம் புரண்டதில், 145 பேர் உயிரிழந்தது, மற்றும் 226 பேர் காயமடைந்துள்ளது குறித்து இந்திய ஆயர் பேரவை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும், உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்காகவும், அவர்களின் குடும்பங்களுக்காகவும் செபிப்பதாகவும் உரைத்த இந்திய ஆயர்பேரவையின் பொதுச்செயலர், ஆயர் தியோடோர் மஸ்கரினஸ் அவர்கள், இந்த விபத்து குறித்த முழு புலன் விசாரணை இடம்பெற்று, அதற்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டு, மேலும் இத்தகைய விபத்துக்கள் இடம்பெறாதிருக்கும்படியான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.இந்தூர் மற்றும் பாட்னா இடையேயான பயணத்தின்போது, ஞாயிறு அதிகாலை 3.10 மணிக்கு கான்பூர் நகரில் தடம்புரண்ட இரயில் வண்டி 14 பெட்டிகளைக் கொண்டிருந்ததாகவும், 2500க்கும் மேற்பட்டோர் பயணம் செய்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.2012ம் ஆண்டு இந்திய இரயில் துறை வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி, இந்தியாவில் இரயில் விபத்துக்களால் ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ 15,000 பேர் உயிரிழக்கின்றனர். ஒவ்வொரு நாளும் இந்தியாவில் ஏறத்தாழ 2 கோடியே 30 இலட்சம் பேர் இரயிலில் பயணம் செய்கின்றனர்.

இந்தியா : ரூபாய் நோட்டு நடவடிக்கை: பிரதமர் கேட்டுள்ள 10 கேள்விகள் பிஜபி

படம். | பிடிஐ.

500 ரூ மற்றும் 1000 ரூ நோட்டுகள் பற்றிய மத்திய அரசின் சமீபத்திய முடிவுக்கு மக்களின் கருத்தை அறிய பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

நரேந்திர மோடி செயலியில் உள்ள பத்து கேள்விகளுக்கு பதில் அளிப்பதன் மூலம் மக்கள் தங்கள் கருத்தை சமர்ப்பிக்கலாம். இந்த கருத்துக் கணிப்புக் கான சுட்டியை தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட மோடி, மக்களிடம் இருந்து நேரடியாக கருத்தை அறிந்து கொள்ள விரும்பியுள்ளார். இந்த 10 கேள்விகளில் ஒரேயொரு கேள்வி மட்டுமே மக்கள் படும் அவதி குறித்து கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் கேட்டுள்ள பத்து கேள்விகள் கீழ்வருமாறு:

1.இந்தியாவில் கருப்புப் பணம் உள்ளது என நினைக்கிறீர்களா? அ) ஆம். ஆ) இல்லை

2.ஊழல் பேயும், கருப்புப் பணமும் ஒழிக்கப்பட வேண்டியன என எண்ணுகிறீர்களா? அ) ஆம். ஆ) இல்லை

3.ஒட்டுமொத்தமாக கருப்புப் பண ஒழிப்பில் அரசின் அணுகுமுறை குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

4.ஊழலை ஒழிக்க மோடி அரசின் முயற்சிகள் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? 1 முதல் 5 என்ற அளவீட்டில்- மிகவும் பாராட்டத்தக்கது, மிக நன்று, நன்று, பரவாயில்லை, தேவையில்லாதது என மதிப்பளிக்கவும்.